7

சேவை

வரவரப் பொருட்காட்சி சாலைகள் எல்லாம் மோசமாக மாறிக் கொண்டிருக்கிறதாகச் சங்கரனுக்குத் தோன்றிற்று. ஏகப் பட்ட சுவரொட்டிகள். ஆகாயத்தில் ராட்சத விளம்பர பலூன். விசேஷ பஸ்கள். உள்ளே நுழையச் சுளையாக ஒரு ரூபாய்க் கட்டணம். ஆனால் சுற்றிப் பார்க்க முழுதாக அரை மணி நேரங்கூடத் தேவைப்படுவதில்லை. திரும்பத் திரும்ப வளைக்கடை களும் பிளாஸ்டிக் சாமான்கள் கடைகளும். மின்சார வாரியமும் காவல் துறையும் பொருட்காட்சிக்கு ஓரளவு மதிப்பளித்தன. அந்தத் துறைகளும் பொருட்காட்சியில் பங்கு பெறாதிருந்தால் சைனா பஜாருக்கும் பொருட்காட்சிக்கும் பெரிய வித்தியாசம் இருந்து விடாது.

திறந்த வெளியில் செப்பிடு வித்தை புரிவது போலப் பிரம் மாண்டமான இருப்புச் சட்டியில் ஒருவன் பிரம்மாண்டமான அப்பளத்தை ஒவ்வொன்றாகப் பொரித்து மிளகாய்ப் பொடி தூவித் தர இன்னொரு செப்பிடு வித்தை புரிவது போல அவற்றைச் சிலர் வாங்கித் தின்று கொண்டிருந்தார்கள். பொரித்த அப்பளத்தின் சூடு; விரலெல்லாம் எண்ணெய்; அப்பளத்தை ஒடிக்கும்போது சிறிது அசிரத்தையாக இருந்தால் கூட அப்பளத் துண்டுகள் தெறித்துச் சிதறிக் கீழே விழுந்து விடும் அபாயம்; தாமரை இலை அளவு அப்பளத்தைக் கையில் வைத்துக்கொள்ள ஆல இலை அளவுக் காகிதத் துண்டு. அங்கு பொருத்தப்பட்டிருந்த பிரகாசமான விளக்கு தகித்தது. அடுப்பின் கணகணப்பும் விளக்கின் தகிப்பும் மாசி மாதப் பனியும் அந்தச் சுற்றுப்புறத்துக்கு விநோத மான சீதோஷ்ண நிலையை அளித்தன. அப்போதுதான் மக்கள் திரள்களிலிருந்து தனித்து ஒரு குழந்தை அழுது கொண்டு நிற்பதைச் சங்கரன் பார்த்தான்.

அந்தக் குழந்தையிடம் சென்று, ''ஏன் பாப்பா, அழுதுண்டிருக்கே?'' என்று கேட்டான். அக்கேள்விக்கு பதிலாகக் குழந்தை அழுதது.

“உன் அப்பா, அம்மா எங்கே?”

அந்தக் குழந்தை அழுகையை நிறுத்தவில்லை. சங்கரன் அங்குமிங்கும் பார்த்தான். யாரும் அந்தக் குழந்தைக்குரியவர்களாகத் தெரியவில்லை. குழந்தையின் கையைப் பிடித்துக் கொண்டான். குழந்தை இன்னும் பெரிதாக அழ ஆரம்பித்தது.

அந்தப் பொருட்காட்சிச் சாலையில் எங்கிருந்தோ மகா மட்டமான சினிமாப் பாடல்களை ஒலிபெருக்கி மூலம் ஒலிக்கச் செய்து கொண்டிருந்தார்கள். நடு நடுவே சில அறிவிப்புகளும் செய்து கொண்டிருந்தார்கள். அங்கு இந்தக் குழந்தையைக் கொண்டு போய்விட்டு விட்டால் சிறிது நேரமாவது அப்பாடல்களைத் தவிர்க்கலாம்.

சங்கரன் மெதுவாகத்தான் அந்தக் குழந்தையை அழைத்துச் சென்றான். ஆனால் அது பெரிதாக அழுது கொண்டிருந்தது. ஒரு பெரியவர் சங்கரனைப் பார்த்து, “ஏம்ப்பா, குழந்தையைப் போட்டு அடிக்கிறே?” என்று கேட்டார்.

“இது என் குழந்தை இல்லை” என்று சங்கரன் சொன்னான்.

''யார்தோ குழந்தைன்னா இப்படியா அழ அழ அடிக்கிறது?”

“யாருய்யா அடிச்சா? இதுவா அழறது.”

“அப்ப குழந்தைகிட்டே உனக்கென்ன வேலை?”

“விவரம் தெரியாம பேசாதீங்க. இந்தக் குழந்தை தனியா அழுதுண்டிருந்தது. நான் கொண்டு போய்விடறேன்.”

“இந்தக் குழந்தையை முதல்லியே தெரியுமா உனக்கு?”

“இது யார்ராவன்? இது தவறிப்போன குழந்தை — கொண்டு போய்ப் போலீஸ்லியோ எக்ஸ்பிஷன் ஆபீஸ்லியோ விட்டுடலாம்னு அழைச்சிண்டு போறேன். நீயும் வேணா என் கூட வா.”

“கொஞ்சம் மரியாதையோடயே பேசறது...” சங்கரன் அவரைப் பார்த்து முறைத்தான்.

அந்தப் பெரியவர் குழந்தையின் இன்னொரு கையைப் பிடிக்க எத்தனித்தார். குழந்தை பயங்கரமாக வீரிட்டு அலறிச் சங்கரனின் கால்களைக் கட்டிக் கொண்டது. அவர்களைச் சுற்றி ஒரு சிறு கூட்டம் கூடிவிட்டது. சங்கரன் கூட்டத்தை விலக்கிக் கொண்டு

பொருட்காட்சிச் சாலை அலுவலகத்தைத் தேடிச் சென்றான். குழந்தை இப்போது அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தது.

விசாரணைக்கூடம் பொருட்காட்சி நுழைவாயிலுக்கருகே இருந்தது. அங்கு ஒரு ரிகார்டு பிளேயர் தன்னிச்சையாகச் சுழன்று கொண்டு வானொலி முதலிய நிறுவனங்கள் தடை செய்த பாடல்களையும் உரக்கப் பகிரங்கப்படுத்திக் கொண்டிருந்தது. அதை முடுக்கிவிட்ட ஆயாசம் தீர அங்கு இருக்க வேண்டியவர்கள் எங்கோ சென்றிருந்தார்கள். அந்த நபர்களுக்காகச் சங்கரன் தவிர இன்னும் சிலரும் காத்திருக்க வேண்டியிருந்தது. குழந்தை அழுவதை நிறுத்தி விட்டுச் சங்கரன் கால்களை இறுகப் பிடித்துக் கொண்டிருந்தது.

விசாரணைக் கூடத்தில் கூட்டம் கணிசமான நேரம் காத்திருந்தாகி விட்டது என்று தோன்றியபின் வருவது போல இருவர் ஒரு தனிவழியாக அந்தக் கூடத்தினுள் வந்தார்கள். ஓர் ஆண், ஒரு பெண், ஆண் சோர்வோடு ஒரு நாற்காலியில் உட்கார அப்பெண்மணி கேட்டாள், "இன்னொரு குழந்தையா?"

சங்கரன் முந்திக் கொண்டு, "ஆமாம்" என்றான்.

பெண்மணி அலட்சியமாகப் பேனாவைக் கையில் எடுத்துக் கொண்டு, "என்ன பெயர்?" என்று கேட்டாள்.

அரை விநாடித் தயக்கத்திற்குப் பிறகு சங்கரன், "சங்கரன்" என்றான்.

அப்பெண்மணி ஒரு காகிதத்தில் சங்கரன் பெயரை எழுதியவாறே, "வயது?" என்று கேட்டாள்.

ஒரு விநாடி இடைவெளிக்குப் பிறகு, "முப்பத்தொன்று," என்று சங்கரன் பதில் சொன்னான்.

இயந்திர ரீதியாக அதை எழுதியவள் சட்டென்று தலை நிமிர்த்தி, "உங்க வயசு இல்லை. குழந்தை வயசு என்ன?" என்று கேட்டாள்.

"எனக்குத் தெரியாது. ஆனா நீங்க பார்த்துச் சொல்லுங்க. நாலு இருக்குமா அஞ்சு இருக்குமா?"

"இதுவா? இது உங்க குழந்தைன்னா நினைச்சேன்?"

"இதுதான் தொலைஞ்சு போன குழந்தை. அதாவது நான் கண்டெடுத்த குழந்தை."

அப்பெண்மணி தன் சகாவைப் பார்த்தாள். அவன் தோள்களை உயர்த்தினான்.

அப்பெண்மணி 'மூன்று' என்று கூறியவாறு குறித்துக் கொண்டாள். பிறகு "உன் பேர் என்ன பாப்பா?" என்று கேட்டாள்.

குழந்தை சங்கரனிடம் இன்னும் நெருங்கி ஓட்டிக் கொண்டது.

"நீங்கதான் கொஞ்சம் கேட்டுச் சொல்லுங்க, சார்."

சங்கரன், "உன் பேர் என்ன பாப்பா?" என்று கேட்டான்.

குழந்தை அந்தச் சுற்றுப்புறத்தைச் சந்தேகத்துடன் பார்த்தது.

"உம், சொல்லு. எங்கிட்டே மட்டும் சொல்லு. நல்ல பாப்பா வோல்லியோ?"

குழந்தை சங்கரனை இரக்கத்தோடு பார்த்தது.

"உம், சொல்லு. எனக்கு மட்டும் சொல்லு."

"பாப்பா."

"உன் பேர் என்ன பாப்பா?"

"பாப்பா."

"அது சரி. நீ பாப்பாதான். உன் பேரு?"

"பாப்பா."

"உன் அப்பா பேரு தெரியுமா?"

"அப்பா."

"அதான் அப்பா பேரு, அப்பா பேரு?"

"அப்பா."

"அம்மா பேரு?"

"அம்மா."

"அம்மா பேருகூடத் தெரியாதா? உங்கப்பா உங்கம்மாவை என்ன சொல்லிக் கூப்பிடுவாரு?"

"அம்மா."

"அம்மா பேரு — அம்மா பேரு."

"அம்மா."

இப்போது விசாரணைக்கூட ஆள் கேட்டான்.

"உங்க அப்பா என்ன பண்ணுவார்!"

குழந்தை பதில் பேசாமல் இருந்தது.

"உங்க அப்பாவுக்கு என்ன வேலை தெரியுமா?"

குழந்தை குழம்பி அழுவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தது.

விசாரணைப் பெண் சங்கரனிடம், "நீங்கதான் கொஞ்சம் கேட்டுச் சொல்லுங்க சார். சட்டுபுட்டுன்னு அன்னவுன்ஸ் பண்ணி விஷயத்தை முடிச்சுடலாம்" என்றாள்.

"பேரு சொல்லத் தெரியாத குழந்தைக்கு அப்பாவின் தொழிலைச் சொல்ல முடியுமா?"

அவள் சங்கரனை முறைத்துப் பார்த்தாள். பிறகு தன் கையிலிருந்த குறிப்புகளை அவளுடைய சகாவிடம் கொடுத்தாள். அவன் ஒரு சுவிட்சைத் தட்டிவிட்டு மைக்ரோ போனை அருகில் நகர்த்திக் கொண்டான்.

ஏகப்பட்ட ஒலிபெருக்கியின் எதிரொலியில் முதலில் சங்கரனுக்கு அந்த அறிவிப்புச் சரியாகப் புரியவில்லை. ஆனால் அறிவிப்பு இரண்டாம் முறை செய்யப்படும் போது, காதில் கேட்டு அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "துணையில்லாமல் தனியாக அழுது கொண்டிருந்த சங்கரன் என்ற மூன்று வயதுக் குழந்தை இங்கு விசாரணை அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. உரியவர்கள் விசாரணை அலுவலகம் வந்து குழந்தையை அழைத்துக் கொள்ளலாம்."

சங்கரன், "பாவி! குழந்தை பெண் குழந்தைய்யா!" என்று கத்தினான்.

அங்கு சுற்றியிருந்தவர்கள் சிரித்தார்கள். அறிவிப்புச் செய்பவன், "என்ன சொன்னே," என்று கேட்டான்.

"குழந்தைக்குப் பேர் தெரியாது. ஆனால் பெண் குழந்தை. அதை இங்கே கொண்டு விட்டிருக்கிற என் பேருதான் சங்கரன்.

"இதை முன்னமேயே சொல்றதுதானே?"

"நீ இப்படித் தப்புத் தப்பாச் சொல்லப் போறேன்னு தெரியுமா?"

"இங்கே பாரு" என்று கூறியவாறு அந்த ஆள் அவனிடமுள்ள குறிப்புத்தாளை நீட்டினான். அதில் சங்கரன் என்ற பெயர்தான் முதலில் எழுதியிருந்தது.

சங்கரன் அந்த அலுவலகப் பெண்ணைப் பார்த்தான். அவளும் அவனைப் பார்த்தாள்.

கடைசியாக திருத்தம் இப்படி அறிவிக்கப்பட்டது: "தனியே நின்று அழுது கொண்டிருந்த மூன்று வயதுக் குழந்தையைச் சங்கரன் என்பவர் இங்கு விசாரணை அலுவலகத்தில் கொண்டு வந்து விட்டிருக்கிறார். உரியவர்கள் வந்து பெற்றுப் போகும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"இனிமேல் நான் போகலாமில்லே?'' என்று சங்கரன் கேட்டான்.

"கொஞ்சம் இரு. குழந்தைக்கு உரியவங்க வந்தப்புறம் போகலாம்."

"அதுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?"

"இல்லை, நீ இருக்கறதுதான் நல்லது. இங்கே சில பேரு கலவரம் ஏற்படுத்தணும்னு யார்தாவது குழந்தையை இங்கே கொண்டு வந்து விட்டுடறாங்க. இதுவரைக்கும் மூணு கேஸு ஆச்சு..."

குழந்தையின் பெற்றோர்கள் இன்னும் ஒரு குழந்தையுடனும் கை நிறையப் பொருள்களையும் வெவ்வேறு கடைகளில் கொடுத்த விளம்பரக் காகிதங்களையும் சுமந்தபடி நிதானமாக வந்தார்கள். அப்போது அவர்கள் தீவிரமாக சர்ச்சை செய்து கொண்டிருந்த விஷயம், மலிவு விலைத் தலையணை ஒன்றுக்கு இரண்டாக ஏன் வாங்கவில்லை என்பது. பெற்றோர்களைக் கண்டதும் குழந்தை சங்கரனின் கால்களை இன்னும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. குழந்தையின் தாய் கேட்டாள். "எங்கேடி நீ பாட்டுக்கு ஊர் சுத்தக் கிளம்பிட்டே?" குழந்தை நடுங்கியது.

"குழந்தையை மணிக்கணக்கிலே அழ விட்டுட்டு நீங்கதான் எங்கேயோ போயிட்டீங்க" என்று சங்கரன் சொன்னான்.

அவள் அதை இலட்சியம் செய்யவில்லை. அறிவிப்பாளர்களிடம், "நீங்க குழந்தை பேரு சொல்லியிருந்தீங்கன்னா எவ்வளவு சௌகரியமாயிருந்திருக்கும்? எவ்வளவு கவலையாய் போச்சு தெரியுமா?" என்றாள்.

"குழந்தை பேரே சொல்லலியே? எவ்வளவு தடவை கேட்டுப் பார்த்தோம்? இவர்தான் ரொம்பக் கஷ்டப்பட்டாரு."

குழந்தையின் தகப்பனாவது சிறிதளவு நன்றியுணர்ச்சி உள்ளவனாக இருந்தான். ஆனால் குழந்தையின் தாயார் குழந்தை தொடர்ந்து திரும்பக் கிடைப்பது சர்வ சாதாரணமான நிகழ்ச்சி என்று எண்ணுவது போல இருந்தாள். அவள் குழந்தையைத் தன்

பக்கம் இழுத்த போதுகூட அது சங்கரனின் கால்களைக் கெட்டி—யாகப் பிடித்துக் கொண்டிருந்தது.

அப்பளக் கடைக்காரன் கடையைக் கட்டிக் கொண்டிருந்தான். ஓர் இறுதி அப்பளமாகப் பொரிக்கச் சொல்லிச் சங்கரன் வாங்கிக் கொண்டான். எண்ணெய் மிகவும் கசந்தது. அப்பளமும் சரியாகப் பொரியவில்லை. ஏறக்குறைய ஒரு மணிநேரம் ஒரு குழந்தை அவன் கையைப் பிடித்த வண்ணம் இருந்திருக்கிறது. அதற்கு அவன் ஒரு பொறுக்குக் கடலை, ஒரு விள்ளல் இனிப்புக்கூட வாங்கித் தரவில்லை. அழும் குழந்தைக்குத் தின்பண்டம் வாங்கித் தருவது இயல்பாக அவனுக்குத் தோன்றவில்லை.

அது அழுது தீர்த்த வண்ணம் இருந்ததால் இயல்பாகத் தோன்றுபவை எல்லாம் தடைபட்டுப் போயிருக்கலாம். குழந்தை தான் என்றால்கூட அது அழுதால் சகிக்க முடிவதில்லை.

ஆனால் மொழியும் சொற்களும் பயன்படாத போது அழுகைதான் மொழியாக இருக்கிறது. அதுதான் யாருமே சந்தேகமறப் புரிந்து கொள்ளக்கூடிய மொழியாக இருக்கிறது.

அந்தக் குழந்தைக்கும் தன்னைப் போலக் கண்ணீர் வற்றிப் போய் அழ முடியாமல் போக இன்னும் ஐந்தாறு ஆண்டுகளாவது ஆகும். பெண் குழந்தை ஆதலால் பதினைந்து இருபது வயது வரை கூட அழலாம். அதற்கு மேலும் கூட அழலாம். ஆனால் அப்படி அழச் சந்தர்ப்பங்கள், வளர்ந்து வயது முற்றியவர்களுக்கே பொருத்தமான சந்தர்ப்பங்களாக இருக்கும். அந்த அழுகையைப் பிறர் ஆறுதல் கூறித் தணிக்க வேண்டியதில்லை. அது முடியாததும் கூட. அவள் குழந்தையாக இருக்கும் வரையில்தான் அழுகைக்கு ஆறுதல் கூறுவது சாத்தியமும் அவசியமும் ஆகும்.

அந்தக் குழந்தை குழந்தையாக இருக்கும் வரையிலாவது அதன் தாய் ஆறுதலாக இருந்தால் நல்லது. ஏனோ அப்படி ஒரு நம்பிக்கை தனக்கு வலுவாகத் தோன்றாதது குறித்துச் சங்கரனுக்கு வருத்தமாக இருந்தது.

1982